# 4

# ரிஸாலத் – II

## இறைத்தூதர்கள்

அல்லாஹ்வின் பிரதிநிதியாக (கலீபாவாக)ப் படைக்கப்பட்டுள்ள மனிதனுக்கு நேர்வழிக்காட்டுவதற்காக அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவர்களே இறைத் தூதர்களாவர். அவர்களை நம்பி, ஏற்றுக் கொள்வது ஈமானின் அடிப்படைகளில் ஒன்று என்பதை ஏற்கனவே படித்துள்ளீர்கள். அல்லாஹ்விடமிருந்து இறைவழி காட்டல்களை ஜிப்ரீல் (அலை) ஊடாகப் பெற்று அவர்கள் அவற்றை மக்களுக்குப் போதித்தார்கள். வழிகேட்டில் மூழ்கியிருந்த மக்களை 'இஸ்லாம்' எனும் ஒளியின் பக்கம் வழிநடத்திச் சென்றார்கள். அவர்கள்

I நுண்ணறிவு (الفَطَانَةُ)

II உண்மை (الصِّدْقُ)

III நம்பிக்கை (الأَمَانَةُ)

IV பிரச்சாரம் (التَّبْلِيغُ)

ஆகிய வாஜிபான பண்புகளைப் பெற்றிருந்தார்கள். தமக்கு வழங்கப்பட்ட ரிஸாலத்தை அப்படியே மக்களுக்கு எத்தி வைத்தார்கள். தமது பொறுப்பை அமானிதமாக ஏற்று எவ்வித மோசடியும் செய்யாது முழுமையாக நிறைவேற்றி னார்கள். தமது சமூதாயத்தினருக்கு நல்லவற்றை உபதேசித்து, தீமைகளிலிருந்து அவர்களைத் தடுத்தார்கள். இறைபாதையில் முழு மூச்சாக ஈடுபட்டு உழைத் தார்கள்.

இறைத்தூதர்கள் அல்லாஹ்வின் அருட்கொடையாளர்கள். அவர்கள் நேர்வழி யையும், வழிகேட்டையும் பிரித்தறியும் ஆற்றலை அல்லாஹ்விடமிருந்து பெற்றிருந் தார்கள். மேலும் அவனுக்கு விருப்பமானவற்றையும், வெறுப்பானவற்றையும் தெரிந்துகொள்ளும் திறமையையும் வஹி மூலம் பெற்றிருந்தார்கள்.

‘‘மனிதர்கள் ஒரே சமூகத்தவர்களாக இருந்தனர். அவர்களை நல்வழிப்படுத்தும் பொருட்டு நன்மாராயம் கூறவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்யவும் அல்லாஹ் நபிமார்களை அனுப்பி வைத்தான். அவர்களுக்குள் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக சத்திய வேதத்தையும் அருளினான்...’’ (2:213)

அல்லாஹ் ஒருவன். அவனையே வழிப்பட வேண்டும் என்ற தவ்ஹீத் கொள்கையை நிலைநிறுத்துவதே அவர்களின் பிரதான பணியாக இருந்தது.

‘‘பூமியில் வாழ்ந்த ஒவ்வொரு வகுப்பினருக்கும் நிச்சயமாக நாம் தூதர்களை அனுப்பி வைத்திருக்கிறோம். அவர்கள், அல்லாஹ்வையே வணங்குங்கள், அவனல்லாத தாகூத் (வழிகெடுக்கும் ஷைத்தான்)களை விட்டும் தவிர்ந்துக் கொள்ளுங்கள் என்று போதித்தார்கள்’’ (16:36)

உலகுக்கு அனுப்பப்பட்ட இறைத்தூதர்களில் 25 பேரின் பெயர்களை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. அவர்களில் 18 நபிமார்களின் பெயர்கள் அல்குர்ஆனின் ஆறாம் அத்தியாயம் சூரதுல் அன்ஆம் : 83 - 86 வரையிலான வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏனைய 7 இறைத்தூதர்களின் பெயர்களும் அல்குர்ஆனில் பரவலாகக் கூறப்பட்டுள்ளன. இவர்கள் தவிர இன்னும் பல இறைத்தூதர்களும் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டதாக அல்குர்ஆன் சுட்டிக் காட்டுகின்றது.

‘‘(நபியே!) நிச்சயமாக நாம் உமக்கு முன்னரும் பல தூதர்களை அனுப்பியி ருக்கிறோம். அவர்களிற் சிலருடைய சரித்திரத்தையே உமக்குக் கூறியிருக்கி றோம். அவர்களில் பலரது சரித்திரத்தை உமக்குக் கூறவில்லை.....’’ (40:78)

இறைத்தூதைச் சுமந்தவர்களை அல்குர்ஆன் ‘நபி’ எனவும் ‘ரஸூல்’ எனவும் சுட்டிக்காட்டுகின்றது. அவர்கள் அனைவருக்கும் வஹீ அருளப்பட்டது. எனினும் அவர்களது பொறுப்புகளில் சிறு வேறுபாடுகள் காணப்பட்டன. ‘ரஸூல்’ எனப்படு வோர் தமது சமூகத்தின் அனைத்து விடயங்களுக்கும் வழிகாட்டக்கூடிய புதிய ஷரீஆவைக் கொண்டு வந்தனர். ‘நபி’ எனப்படுவோர் முன்னைய ஷரீஆவை மக்களிடையே போதிக்கும் பணியை மேற்கொண்டனர். சில இறைத்தூதர்களை ‘நபி, ரஸூல்’ எனும் இரு பதங்களாலும் அல்குர்ஆன் சுட்டிக்காட்டுகின்றது.

‘‘(நபியே!) உமக்கு முன் நாம் அனுப்பிய ஒவ்வொரு ரஸூலினதும் நபியினதும் விருப்பத்தில் ஷைத்தான் குழப்பத்தை உண்டு பண்ண முயற்சித்தே இருக்கின்றான்......’’ (22:52)

இறைத்தூதைக் கொண்டு வந்தவர்களிற் சிலர் பாரிய சவால்களை எதிர்கொண்டனர். அவர்கள் பல்வேறு சோதனைக்கு உட்படுத்தபடுத்தப்பட்டுள்ளனர். அதனை அவர்கள் உறுதியோடு நின்று எதிர்கொண்டமையால் அவர்களை அல்குர்ஆன் ‘‘உலுல் அஸ்ம்’’ என சிலாகித்துக் கூறுகின்றது.

மக்களை வழிநடத்துவதற்காக அல்லாஹ்வினால் தெரிவு செய்யப்பட்ட இறைத் தூதர்கள் மனிதர்களில் சிரேஷ்டமானவர்களாவர் அவர்களை அல்லாஹ் ஏனைய மக்களை விடவும் மேன்மையானவர்களாக ஆக்கினான்.

‘‘நிச்சயமாக அல்லாஹ் ஆதத்தையும், நூஹையும், இப்ராஹீமின் குடும்பத்தையும், இம்ரானின் குடும்பத்தையும் அகிலத்தாரில் (மேன்மக்களாகத்) தெரிவு செய்தான்...’’ (3:33)

இறைத்தூதர்கள் தனியான பல தன்மைகளைக் கொண்டிருந்தனர். அவை அவர்களுக்குத் தமது தூதுத்துவப் பணியை வெற்றிகரமாக மேற்கொள்ள உறுதுணையாய் அமைந்தன. அவற்றிற் சிலவற்றை நோக்குவோம்.

### 1. மு..ஜிஸாத் - அற்புதங்கள்:

‘‘நிச்சயமாக நாம் நமது தூதர்களைத் தெளிவான (அற்புதங்கள்), அத்தாட்சிகளோடு அனுப்பி வைத்தோம். அவர்களுக்கு வேதத்தையும், (நீதத்தின்) நிறைகோலையும் அருளினோம்...’’ (57:25)

### 2. அத்தாட்சிகளும், வேதங்களும்:

‘‘அவர்களுக்கு நாம் வேதத்தையும், அதிகாரத்தையும், நுபுவ்வத்தையும் கொடுத்திருந்தோம்..’’ (6:89)

‘‘இதற்கு முன்னர் வந்த இறைத்தூதர்களும் தெளிவான அத்தாட்சிகளையும் இறைகட்டளைகளையும் (ஸுஹுபு) பிரகாசமிக்க வேதங்களையும் கொண்டு வந்திருந்தனர்..’’ (35:25)

### 3. ஒரே அடிப்படையிலான தீன் (மார்க்கம்):

‘‘நூஹுக்கு அவன் ஏவியவற்றையே உங்களுக்கும் மார்க்கமாக்கியிருக்கிறான். இப்ராஹீம், மூஸா, ஈஸா ஆகியோருக்கு, இந்த தீனை நிலைநிறுத்துங்கள்’ என உபதேசித்ததையே உமக்கும் வஹியாக அறிவித்துள்ளோம்.....’’ (42:13)

### 4. அல்லாஹ்வின் உதவியும் பாதுகாப்பும்:

‘‘இறைத்தூதரே! உமது இரட்சகனிடமிருந்து அருளப்பெற்றதை (அப்படியே) அறிவித்து விடும். அவ்வாறு செய்யாவிட்டால் உமது பொறுப்பைப் பூரணமாக நிறைவேற்றியவராகமாட்டீர். (இதில் எவருக்கும் அஞ்சாதீர்) மனிதர்(களின் தீங்கு)களிலிருந்து அல்லாஹ் உம்மைப் பாதுகாப்பான்...’’ (5:67)

### 5. நேர்வழியும் சத்தியமும்:

‘‘அவன்தான் தன்னுடைய தூதரை நேர்வழியைக் கொண்டும் சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பி வைத்தான்...’’ (9:33)

### 6. இஸ்மத் (பாவங்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றிருத்தல்):

‘‘உமக்கு முன்னர் நாம் அனுப்பிய நபியுடையவும், ரஸூலுடையவும் விருப்பத்தில் ஷைத்தான் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்காமல் இல்லை. ஷைத்தான் உண்டுபண்ணிய தப்பெண்ணத்தை நீக்கி, எமது அத்தாட்சிகளை அவர்களது மனங்களில் நாம் உறுதிப்படுத்தி விடுகின்றோம்.’’ (22:52)

இவ்வாறு அனுப்பப்பட்ட இறைத்தூதர்களில் இறுதியாக வந்தவர் முஹம்மத் **ச** ஆவார்கள். இவர்களின் வருகையோடு தூதுத்துவமும் தூதுவர்களின் வருகையும் முற்றுப் பெற்றுவிட்டன. இவர்களுக்குப் பின்னர் எந்தத் தூதரும் வரமாட்டார்கள்; மேலும் எந்த வேதமும் வஹியும் வரமாட்டாது. முஹம்மத் **ச** அவர்கள் உலக மக்களுக்கான பொதுவான றஹ்மத்தாக அனுப்பப் பட்டுள்ளார்கள். அவர்களின் வழிகாட்டல்களையே நாம் அனைவரும் பின்பற்ற வேண்டும்.




**பயிற்சி**

1. அல்குர்ஆன், 'உலுல் அஸ்ம்' எனச்சிலாகித்துக் கூறும் இறைத் தூதர்களின் எண்ணிக்கை யாது? அவர்களின் பெயர்கள் யாவை?
2. இறைத்தூதர்களிடம் காணப்பட்ட சிறப்புப் பண்புகளை எழுதுக.
3. செயற்பாடு

   அ. ஸூரதுல் அன்ஆமில் குறிப்பிடப்பட்டுள்ள இறைத்தூதர்களின் பெயர்களைக் கண்டறிந்து தொகுக்குக.

   ஆ. ஸூரதுல் அன்ஆமில் குறிப்பிடப்படாத நபிமார்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ள அல்குர்ஆன் வசனங்களைத் தொகுத்தெழுதுக.